REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் : அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

'தேவதாசி' நடனத்திற்குத் தடை!

★

ஆந்திர அரசாங்கம், கல்யாண ஊர்வலங்களில் 'தேவதாசி'கள் நடனமாடுவதைத் தடுக்கும் நோக்குடன் மசோதா ஒன்றை வெளியிட்டுள்ளது. 'போகம் மேலாலு' என்று அழைக்கப்படுகிற இந்த முறை, திருமண ஊர்வலங்களில் 'தாசி'களை நடனமாடச் செய்கிற ஒரு ஏற்பாடு, ஆந்திர மாநிலத்தின் சில பகுதிகளில் இருந்து வருகிறது.

இந்தப் பழக்கத்தை ஒழிக்க சட்டமாக்கப்படுவதற்கான மசோதா நாளை துவங்கவிருக்கும் சட்ட சபையின் விவாதத்திற்கு வருமெனத் தெரிகிறது.

மலர் 2] சென்னை : ஐப்பசி 13உ வெள்ளி (29—10—54) ★ ★ வெளியூர் : ஐப்பசி 14உ சனி (30—10—54) [இதழ் 118

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாய்கிறது!

இந்ியப் பேரரசின் நில ஆசையை மிஞ்சும் கேரள காங்கிரஸ் பேராசை!

மொழி அடிப்படையில் கேரள மாநிலமாம்!

நிர்வாக போர்வையில் பிற மொழியினர் மீது ஆதிக்கம் வேண்டுமாம்!

'கேரள காங்கிரசின் 'தொத்து நோய்' புத்தி

மாநில புனரமைப்புக் குழுவினரிடம், தி.-கொ. மாநில காங்கிரஸ் குழுவினர் கோரிச் செய்துகொண்ட மனு ஒன்றில், "மேற்கு தொடர்ச்சி மலைகளின் மேற்குச் சரிவுப் பகுதிகளிலுள்ள தென் கன்னடம், காசர்கோடு, குடகு, கோட்டைக்கொச்சி உள்பட மலபார் மாவட்டம், கூடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேற்குப் பகுதிகள், லட்சத் தீவு, மால் தீவுகள் ஆகியவை தற்போதைய திரு—கொச்சி மாநிலத்துடன் இணைக்கப்பட்டு கேரள மாகாணம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்," என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"இந்திய நாகரிகத்தின் தொடக்க காலவரலாறு எவ்வளவு பழமை வாய்ந்ததோ, அவ்வளவு பழமை வாய்ந்தது, கேரள மாகாணம் அமைக்கப்பட வேண்டுமென்பது; மேற்குறிப்பிட்ட பகுதிகள், பண்டைக் காலத்தில் ஒரே அரசின் கீழ் நெடுங்காலமாக இருந்து வந்திருக்கின்றன; இப்பகுதிகள் சமூக, பொருளாதார, கலாச்சார அமைப்புக்களால் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றன என்பது மறுக்கமுடியாததாகும்," என்றும் அந்த மனுவில் காணப்படுகிறது.

மேலும் அந்த மனுவில் தி.-கொ. மாநில காங்கிரஸ் குழு தெரிவித்திருப்பதாவது:—

" திருவிதாங்கூர்—கொச்சி ஆகிய மாநிலம் அமைக்கப்படுவது, கேரள மாகாணம் அமைக்கப்படுவதற்கு ஒரு முதல் நடவடிக்கையாக இருக்குமென்ற கருத்தின் பேரிலேயே, திருவாங்கூரும் கொச்சியும் இணைக்கப்படுவதற்கு அந்த மாநில காங்கிரஸ்காரர்கள் இணக்கம் தெரிவித்தனர். கேரள மாகாணம் தனித்து இயங்க முடியும். மேலும், மலபார் பகுதிகளை திரு-கொச்சியுடன் இணைத்தால் அது பெரும் சுமையாக இருக்கும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. திருவாங்கூரையும் — கொச்சியையும் இணைக்கும் முதல் நடவடிக்கையிலீடுபட்டு அதை மேற்கொண்ட பின்பு, கேரளத் தனி மாகாணம் அமைக்கும் நியாயமான அடுத்த நடவடிக்கையைத் தள்ளிவைக்க முடியாது."

சென்னையுடன் இணைக்கக்கூடாது

" திரு—கொச்சியை சென்னை மாநிலத்துடன் இணைத்தால் மலையாளிகள், தமிழர்கள் ஆகியோரின்

(4-ம் பக்கம் பார்க்க)

25,000 தமிழர்களை வெளியேற்ற!

இலங்கை மேற்கொண்டுள்ள முறை!

சென்ற ஜூலை இறுதியில் இலங்கையும், இந்தியாவும் இணங்கின தற்கொப்ப, குடியிருப்பு அனுமதி காலம் முடிவுற்ற 25,000 தமிழர்களை, ஐந்து பகுதிகளாகப் பிரித்து அனுப்புவதற்கான திட்டமொன்றை தீட்டி இருக்கிறது.

முதல் பகுதியைச் சேர்ந்த, 5,000 தமிழர்கள் ஜனவரி மத்தியில் இலங்கையை விட்டு வெளியேறுவர்.

இரண்டாவது பகுதி 5,000 - நபர்களை வெளியேறுமாறு, ஜனவரியில் இலங்கைசர்க்கார் கட்டளை பிறப்பிக்கக்கூடுமென நம்பப்படுகிறது.

முதலில் வெளியேறும் தமிழர்களில், இலங்கையிலுள்ள இந்தியக் குடிமக்களிடம் பணி புரிந்து கொண்டிருந்த குடும்பத் தொழிலாளர்களும், தோட்டத் தொழிலாளர்களும் மாதம் ஒன்றுக்கு ரூ. 100-க்குக் குறைவாக ஊதியம் பெற்றுக்கொண்டிருந்த குமஸ்தாக்களும், பெரும் எண்ணிக்கையிலிருப்பர் என்று சொல்லப்படுகிறது.

மீதமுள்ள 20,000 தமிழர்கள் வெளியேற்ற விஷயத்தில், உத்தியோகப்பாகுபாட்டைக் கருதாமலேயே, மூன்று மாத கெடு கொடுத்து வெளியேற்ற உத்தரவை இலங்கை சர்க்கார் கொடுக்க இருப்பதாகவும், அதுவும் இந்த ஆண்டு முடிவிற்குள் கொடுக்கப்பட்டுவிடும் என்றும் தெரியவருகிறது.

தோழர் நெடுஞ்செழியன் இலங்கையிலிருந்து திரும்பினார்

சென்னை விமான நிலையத்தில் வரவேற்பு

சென்னை, அக். 28—

தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் கடந்த இரண்டு வார காலமாக, இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து, பல சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்திவிட்டு இன்று காலை 11 மணியளவில் 'ஏர்சிலோன்' விமான மூலம், சென்னை திரும்பினார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நூற்றுக்கணக்கான தோழர்கள் கூடிநின்று அவரை வரவேற்றனர். ஏராளமான மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அவருக்கு அணிவிக்கப்பெற்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரதம்

திருநெல்வேலி சதிவழக்கின் போது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு நாகபுரி மத்திய சிறையில் இருக்கும் தோழர் பாலதண்டாயுதம், தம்மை தமிழ் நாட்டிலுள்ள சிறைக்கு மாற்றிவிடும்படியாகக் கோரி சென்ற 23-ந் தேதியிலிருந்து சிறையினுள்ளேயே உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

கல்கத்தாவில் 6,500 குண்டர்கள் கைது

பொழுதுபோக்கு நிலையங்கள் இல்லாமையினால் இளைஞர்கள் குற்றவாளியாகின்றனர்

கல்கத்தா போலீசாரின் கருத்து

கல்கத்தா நகர போலீஸ் இலாகாவினர், காலிகளையும், குற்றம் புரிவோரையும் அடக்கப் புதிதாக ஏற்படுத்தியுள்ள தனிப் போலீஸ் பிரிவினர், நகரப் பொதுமக்களின் உதவியுடன் இதுவரை 6,500 காலிகளைக் கைது செய்துள்ளனர் என்று தெரிகிறது.

இப்படிக் கைது செய்யப்பட்டவர்களில் 90 சதவிகிதத்தினர் ஏற்கெனவே, பலவித குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் என்றும், இவர்கள், சூதாட்டம். ஜேப்படி செய்வது, திருட்டு, பொருள்களைத் திடீரென அபகரித்துச் செல்லுதல் போன்ற குற்றங்களில் ஈடுபடுகிறவர்கள் என்று போலீசார் கூறுகின்றனர்.

மீதம் உள்ள பத்துசதவிகிதத்தினர் இளைஞர்கள் என்றும், இவர்கள் பெருவாரியாக வேலை கிடைக்காது திரியும் மத்தியதர வர்க்கத்தினர் என்றும், இவர்கள் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவைகளில் சிறிதளவு கல்வி பெற்றவர்கள் என்றும் தெரிகிறதாம்.

கலகம் விளைவிப்பது, தாங்கள் வசிக்கும் பகுதிகளில் வாழும் பெண்களிடம் தகாதமுறையில் நடந்துகொள்வது ஆகிய குற்றங்களுக்காகவே இவர்கள் கைது செய்யப்படுகின்றனர் என்று போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது!

(4-ம் பக்கம் பார்க்க)

அங்கீகரிக்காதே!

ஹனாயிலுள்ள அமெரிக்க கான்சல் - ஜெனரல் காரியாலயத்தை அங்கீகரிக்க வேண்டாமென்று ஹனாய் கம்யூனிஸ்டு அதிகாரிகள் தீர்மானித்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவின் 6-வது அணுகுண்டு பரிசோதனை

உலகின் பெரும் பகுதியில் கதிர் இயக்கப் பொருள்கள் வீழ்ச்சி

சென்ற மாத மத்தியிலிருந்து சோவியத் ரஷ்யா பல தடவைகளில் அணுகுண்டுகளை வெடித்துப் பரிசோதனை நடத்தியதாக அமெரிக்க அணுசக்திக் குழு தெரிவித்திருக்கிறது.

அமெரிக்க அணுசக்தி குழுவின் தலைவர், " இந்தப் பரிசோதனைகள் செப்டம்பர் மத்தியில் துவங்கி, குறிப்பிட்ட இடைவேளைகளில் இதுவரை நடைபெற்றன," என்று கூறியுள்ளார்.

" பொதுவாக, இதுபோன்ற அணு பரிசோதனைகளில் உள்ளதைக் காட்டிலும், பரவலாக அதிகமான இடங்களில் கதிர் இயக்கமுள்ள பொருள்கள் வீழ்ந்தன என்றும், ஆனால் அமெரிக்காவில் அவைகள் அலட்சியப் படுத்தப்படும் அளவில்தான் வீழ்ந்தன " என்றும் அவர் மேலும் கூறினார்.

" சோவியத் பொறி இயல் நிபுணர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் உதவும் நோக்குடன் தான் ஆறாவது தடவையாக செப்டம்பர் 17-ல், அணுகுண்டு பரிசோதனை நடத்தியது," என்று சோவியத் சர்க்கார் அறிவித்தது.

'அதிகாரிகளாயிருப்பதாலேயே அட்டகாசம் புரியாதீர்!'

மாகாண நீதிபதியின் எச்சரிக்கை!

குற்றமற்றவரை காவலில் வைத்த போலீசாருக்கு சிறைத் தண்டனை!

"தண்டனை தரப்படுவதினால், சக்ரவர்த்தி என்ற இந்தப் போலீஸ்காரர் வேலை இழப்பார் என்பது எனக்குத் தெரியும்; என்றாலும், தண்டனை தராமல் இருக்க இயலவில்லை; காரணம், இவருக்குத் தரப்படுகிற தண்டனை, 'மக்களிடம் எப்படி வேண்டுமானாலும் தம்மிஷ்டம்போல், தாம் போலீஸ்காரராக இருப்பதால் நடந்துகொள்ளலாம்,' என்று இன்னும் நினைத்துக் கொண்டிருக்கக் கூடிய போலீஸ் அதிகாரிகளுக்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான்; குற்றம் ஏதும் செய்யாத ஒருவரை காவலில் வைத்ததின் மூலம், இந்தப் போலீஸ்காரர், அந்த மனிதரின் சுதந்திரமாக உலவும் அடிப்படை உரிமையைப் பறித்து விட்டிருக்கிறார்; 'இது தண்டனை தரப்பட வேண்டிய குற்றம் என்று நான் கருதுவதைத் தவிர, வேறு வழியில்லை,"

—இவ்வாறு, கடந்த மே மாதம், பர்தோலா போலீஸ் நிலையத்தில் குற்றமேதும் செய்யாத ஒருவரை, காவலில் வைத்ததாக குற்றம் சாட்டப்பட்ட போலீஸ்காரருக்கு ரூ. 200 அபராதம் மூன்று மாத சிறைத் தண்டனை என்று தீர்ப்பு வழங்கிய எ. பி. தாஸ் என்ற மாகாண நீதிபதி, தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை
சன்னை 29—10—1954 வெள்ளி

முடிவு கட்ட வேண்டும்

'உலகே மாயம், வாழ்வே மாயம், நாம் காணும் சுகமே மாயம்' என்னும் பித்தலாட்டக் கருத்துக்கு இரையாகிக் கிடக்கிற ஒரு சமுதாய மக்களிடம் சிறந்த வாழ்வு நடாத்த வேண்டுமென்ற உயர்ந்த கருத்து வேர் விடுவது எளிதான காரியமல்ல. வாழ்வு நித்தியமானது என்பதில் நம்பிக்கை கொள்ளாத மக்கள் நடத்தும் வாழ்க்கையில் குறை காணக் கிளம்புவது, மணற்சோற்றில் கல் ஆராயப் புகும் கேலிக்கூத்துக்கே ஒப்பாகும்.

உயிரோடு உடல் ஒட்டிக் கொண்டிருந்தாலும் போதும் என்ற நினைப்பில் நம் மக்களில் பெரும்பாலோர் வாழ்ந்து வருவதை நாம் காண்கிறோம். உயிருடன் ஒட்டிய உடலின் இயல்புதான், அந்நினைப்பிற்கும் ஆணிவேராக உள்ளது. மக்கள் கூட்டத்திற்கும் மாக்கள் கூட்டத்திற்கும் இது பொதுப் படையாக உள்ள ஒன்றாகும். எனவே, 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற அறிவியல் கோட்பாடு, வேண்டிய அளவில் மக்கள் கருத்தில் இடம் பெறச் செய்தால்தான், அவர்களிடம் காணப்பெறும் கருத்துக் குருடு மாய்ந்தொழியும். அப்பொழுது தான், மாக்கள் வாழ்விலிருந்து மாறி மக்கள் வாழ்வு, அறிவியல் துணை கொண்டு மலர்ந்து நறுமணம் வீசும்.

கருத்துக் குருடராக உள்ள பெரும்பான்மை மக்கள் மற்ற வாழ்க்கைத் துறைகளில் விலங்கினத்தைப் பின்பற்றி வருவது போன்றே, கல்வித் துறையிலும் கவலையற்றவர்களாக இருந்தனர்— இருக்கின்றனர்.

எழுத்தும் எண்ணும் கற்றல் எதுக்கு என, கல்வித்துறையை ஒதுக்கித்தள்ளி வந்தனர்—வருகின்றனர். இந்த அவலநிலை இப்பொழுது புரட்சிகரமாக மாறி வந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. இம்மாற்றத்தின் விளைவாகத்தான், நம் மக்களில் பலர், பல வகை கல்விப் பிரிவுகளிலும் உச்சம் பெற்று இருக்கிறார்கள்—பெறவும் போட்டியிடுகிறார்கள். நிற்க,

'வாழ்வாவது மாயம்' என்ற கருத்துக்கு பலியாகிக் கிடக்கிற மக்களிடம், எழுதப்படிக்கத் தெரியாத முதியோர் தொகை பெரிய எண்ணிக்கையில் இருப்பதில் ஆச்சரியமில்லை. அந்த முதியவர்களுக்கு எழுத்தறிவித்து உலக அறிவு பெறச் செய்வது என்பது இலகுவானதல்ல. பல ஆண்டுகாலம் முயற்சித்தாலும், 'எண்ணெய் செலவே யல்லாது பிள்ளை பிழைக்காது' என்ற முதுமொழிக்கொப்பாகவே முடிவு இருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

எழுதப் படிக்கத் தெரியாமலும், கல்வி பெருதது ஒரு குறைபாடு எனக்கருதிவருந்தாமலும், நமது முதியவர்கள் தங்கள் வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவழித்து விட்டார்கள். இக்கல்வி பெருதோர் பட்டியலில் 'பல இளைஞர்களும்' உள்ளனர் என்பதை அனைவரும் அறிவர். அவர்களை, மூப்படைந்துவிட்ட—முதியவர்களைவிட்டுப் பிரித்து, அவர்களுக்கு மட்டும் கல்விபெற ஏற்பாடு செய்வது ஒப்புக்கொள்ளக் கூடியதாகும்.

பள்ளி செல்லும் வயது வந்தும், சேர்ந்து பயிலுவதற்கான பள்ளி இல்லாது திண்டாடும் சிறுர்களுக்கும், பள்ளியில் சேர்ந்தாலும், பொருளாதார நெருக்கடியின் காரணமாக துவக்கப்பள்ளி படிப்பை இடையிலேயே விட்டுவிட வேண்டிய கட்டாயத்திலுள்ள சிறுர்களுக்கும் கல்வி பெற ஏற்பாடு செய்வதுதான், முதியோருக்குக் கல்வி போதிக்கும் முயற்சியிலும் முக்கியமானதாகும்.

சிறுர்கள் அனைவருக்கும் கல்வி வசதி செய்துவிட்டு வேண்டுமானல், முதியவர் கல்வி பெறுவதைக் குறித்து அரசியலார் யோசிக்கலாம். சிறுர்களின் கல்வி போதனைக்குப் பணம் இல்லையென்று பரிதாபத்துடன் பேசும் அரசியலார், வீண் பகட்டுக்காக, முதியோர் கல்வித் திட்டத்துக்கென, ஒரு காலணு செலவிடுவதாக இருந்தாலும், அது வருந்தத் தக்கது—கண்டிக்கத்தக்கது. முதியோர் கல்வி பெறுவதுதான் நோக்கமா, அல்லது வெறும் விளம்பரந்தான் நோக்கமா என அரசியலார் நோக்கத்திலும் ஒருவருக்கு சந்தேகம் வரத்தான் வரும்.

சென்னை மாநிலம் முழுவதிலும் இரண்டாயிரம் பள்ளிகளில் இம்முதியோர் கல்வித் திட்டம், கடந்த ஆறு ஆண்டு காலமாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் சராசரி பத்து முதியவர்களுக்கு மேல் சேர்ந்திருக்கவில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது. இந்த உண்மையைப் புதிய கல்வித் துறை முதல்வரே இரண்டு நாட்களுக்கு முன் அறிவித்து இருக்கிறர்.

அவர் கூறினது ஒருபக்கம் இருக்க, செங்கற்பட்டு மாவட்ட முதியோர் கல்வித் திட்டக் குழுவும், அத்திட்டத்தைக் குறித்து அதிருப்தி கொண்டிருக்கிறது. அத்திட்டம் தோற்றுவிட்டதாக சென்னை அரசியலாரே ஒப்புக்கொண்டுள்ளதாகவும், மேற்படி மாவட்டக் குழு அறிவித்தும் இருக்கிறது.

இப்பொழுது போதிக்கப் பட்டுவரும் இடங்களை கைவிட்டுவிட்டு, சமூக நலத் திட்டம் நடைமுறையில் உள்ள பகுதிகளுக்கு, அம்முதியோர் கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர அரசியலார் கூறியுள்ள கருத்தையும், செங்கற்பட்டு முதியோர் கல்வித் திட்டக் குழு ஒப்புக்கொள்ளத் தயங்குகிறது. முதியோர் கல்வித் திட்ட வெற்றிக்கான யோசனையையும் மேற்படி குழு கூறி இருக்கிறது. அந்த யோசனை வெற்றி பெறுமா என்பதும் சந்தேகம் தான்!

கல்வித்துறை அலுவலர் தந்துள்ள விளக்கமும், செங்கற்பட்டு முதியோர் கல்வித் திட்டக் குழு கூறியுள்ளதும், முதியோர் கல்வித் திட்டம் பெற்றுள்ள முழுத்தோல்வியை ஒப்பாமல் ஒப்புக் கொள்ளுவதாகவே இருக்கிறது. ஆறு ஆண்டு முயன்றும், கல்விபெற வேண்டிய முதியவர்கள் ஏராளமாக நாட்டில் இருந்தும், உள்ள இரண்டாயிரம் பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளியிலும் சேர்ந்துள்ள முதியவர்களின் தொகை பத்துக்கு மேல் இல்லை என்பது, திட்டத்தின் வெற்றியைக் காட்டுவதற்குப் பதிலாக, தோல்வியைத்தான் உறுதி செய்வதாக இருக்கிறது.

முதியோர்களிடம் கல்வித் தொண்டு செய்யக் கிளம்பும் மாணவர்கள், கல்விபெறவிழையும் முதியவர்களைவிட, தாம் உயர்ந்தவர்கள் என நினைத்துக் கொள்ளக் கூடாது என புதிய கல்வித்துறை முதல்வர் குறிப்பிட்டுள்ளார். மாணவர்களுக்கு இது மிகமிகத் தேவைப்படும் அறிவுரை என்பதில் ஐயமில்லை. முதியோர் கல்வித் துறையில் ஆசிரியர்களாகப் பணியாற்றக் கிளம்பும் மாணவர்கள், அலுவலர் கூறும் அறிவுரைக் கேற்ப, முதியோர்களிடம் அடக்கமாக நடந்து கொள்ள முன்வந்தபோதிலும், அதனுலும் முதியோர் கல்வித் திட்டம் வெற்றிபெற்றுவிடும் என நம்புவதற்கில்லை. முதியவர்கள் வயதுக்குக்காட்டும் நன்மதிப்பை, தங்களுக்குக் கல்வி கற்பிக்கவரும் வயதில் குறைந்த மாணவ ஆசிரியர்களிடம் காட்டமாட்டார்கள் என்பது உறுதி. சிற்றூர் பகுதிகளில் இந்த வயது ஏற்றத் தாழ்வால் விளையும் தொல்லை அதிகம் என்பதை அனைவரும் அறிவர். மாணவ ஆசிரியர்—முதியோர் ஆகிய இருவரிடை காணப் பெறும் வயது வேற்றுமையையும், அதனடியாக உருவாகும் உயர்வு தாழ்வு மனப்பாங்கையும் மாற்றுவதற்கு மார்க்கம் ஒன்றும் கிடையாது. எனவே, முதியோர் கல்வித் திட்டத்தை ஒரேயடியாக முடிவுகட்டிவிடுவதே நலம். அதற்குச் செலவழிக்கப்படும் பணத்தை, சிறுர்கள் கல்விக்குச் செலவாகும் தொகையுடன் சேர்த்துச் செலவிடுவதே முறையாகும். புதிய அலுவலர் இதைச் செய்து முடிப்பார் என எதிர்பார்க்கிறோம்.

பிரிட்டிஷ் ஆட்சியின் பலன்!

பீகிங், முக்டன், வடகிழக்குச் சீனவிலுள்ள டெய்ரன் ஆகிய இடங்களுக்குச் சென்றபோது, அந்த இடங்களிலெல்லாம், தொழில் மயமாக்கும் நடவடிக்கைகள் முன்னேறிக் கொண்டு வருவதாகவும், காலக்கிரமத்தில் சைனவின் இதர பகுதிகளும் தொழில் மயமாக்கப்படுமென்று தாம் நம்புவதாகவும் பீகிங் பத்திரிகை நிருபர்களிடம், பிரதமர் நேரு தெரிவித்திருக்கிறர்.

"இந்தியாவில் நிலப் பிரச்னையும், தொழிற் பிரச்னையும் இருந்தாலும், தற்போது, இந்தியா இயந்திரத் தொழில் மயமாக்குவதில் சீனவைவிட முன்னேறியே இருக்கிறது என்று கருதுகிறேன்; மேலும், தொழில் மயமாக்குவதில் இந்தியா தன் வேகத்தை அதிகரிக்க முயன்று வருகிறது," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறர்.

இந்திமொழியை எதிர்க்கும் குஜராத்திகள்!

சொந்த மொழியிலேயே கணக்கு வைத்துக்கொள்ள அனுமதி கோருகின்றனர்!

இந்தி மொழி 'இந்திய ஒற்றுமை'யை வளர்க்குமாம்!

சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம் கூற்று!

"இந்தி தேசீய மொழியாக்கப்பட்டிருப்பதினல் அது தேசத்தின் ஒற்றுமையை வளர்க்கும்; வட இந்தியர்கள், தென்னிந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொள்ள முன்வருவார்களானல், பிரதேச மொழிகளின் இடத்தை இந்தி பிடித்துக்கொள்ளுமோ என்கிற அச்சம் நீங்க முடியும்,"

—என்று, சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம், 'குஜராத்தி மண்டல்' உறுப்பினர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

மண்டல் தலைவரான கோதாரி, மந்திரியாரை வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது :—

"வருகிற 1955 ஏப்ரல் 1-ந் தேதி முதல் விற்பனை வரி அறிக்கைகள் தமிழ், இந்தி, ஆங்கிலம் இவை ஏதேனும் ஒரு மொழியில்தான் அரசாங்கத்திற்குத் தரப்பட வேண்டும்," என்று சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருப்பதைக் குறிப்பிட்டு, குஜராத்திகளில் பெரும்பாலானேர் சிறிய சிறிய வியாபாரிகள் என்றும், அவர்கள், தங்கள் தாய்மொழியல்லாத வேறு மொழிகளில் கணக்கு வைத்துக் கொள்வதற்கு தனியாக ஆள் வைத்துக் கொள்ள இயலாதவர்கள் என்றும், எனவே அரசாங்க உத்திரவை மாற்ற வேண்டுமெனவும் கோரினர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறியதாவது :—

"இந்தியில் கணக்குகளை வைத்திருப்பதில் குஜராத்தியர்களுக்கு என்ன கஷ்டமிருக்குமென்பதை என்னல் புரிந்துகொள்ள முடியவில்லை ; இந்தியும் – குஜராத்தியும் மிக நெருங்கிய தொடர்புடைய, ஒற்றுமையுடைய மொழிகள் ; எழுத்து வடிவ அமைப்பிலும்கூட இரு மொழிகளும் தொடர்புடையனவாயிருக்கும்போது, ஏன் இந்தியிலேயே கணக்குகளை வைத்துக் கொள்ளக் கூடாது ?

புதிய உத்திரவு அமுலாக்கப்பட வேண்டிய கால அளவை வேண்டுமானல் இன்னும் சற்று அதிகரிக்கக் கோரினல், கவனிக்கிறேன்," என்றார்.

கணவர்களை எதிர்த்து - மனைவியர் முன்னணி!

குடும்பப் பொறுப்பை உணர்த்தவே இந்தக் கோமாளிச் செயலாம்!

கராச்சி—

இங்குள்ள பெண்கள் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் "கணவர் எதிர்ப்பு முன்னணி" ஒன்று உருவாக்கப் பட்டிருக்கிறது என்ற செய்தி வெளிவந்துள்ளது.

இந்த முன்னணியை உருவாக்குவதில் முன்னின்ற ஒரு பெண்மணி, நகரத்தில் உள்ள ஒரு பெரும் வியாபாரியின் மனைவியார் என்று தெரிகிறது.

அந்த அம்மையார், "கணவர்கள், குடும்பத்தில் அதிக அக்கரை காட்டவும், வீட்டினை சரிவரக் கவனிக்கவும் வற்புறுத்துவதற்காகக் கணவர்கள்மீது 'நேரடி நடவடிக்கை' கூட தமது முன்னணி எடுக்கும்" என்று பேசினராம்!

"மது அருந்துவது, இரவு வெகுநேரம் கழித்து இல்லம் திரும்புவது போன்ற கணவர்களின் தீய நடத்தைகளை அவர்கள் கைவிட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தும் வகையில் 'கணவர் எதிர்ப்பு அணி' இயக்கம் ஒன்றை சீக்கிரமே நடத்தக்கூடும்" என்றும் அந்த அம்மையார் குறிப்பிட்டிருக்கிறர்.

இந்த 'எதிர்ப்பு' இயககம் எப்படி நடத்தப்பட இருக்கிறது என்பது இன்னும் வெளியிடப்படாத இரகசியமாகவே இருக்கிறதாம்!

ஆட்சியாளர் சிந்தனைக்கு!

நியூயார்க் மாநிலத்திலுள்ள க்ஷயரோக விடுதி ஒன்று போதிய நோயாளிகள் இல்லாமையால் மூடப்பட்டு விட்டது.

'ஹவுஸ் ஆப் ரெஸ்ட்' என்று பெயர்கொண்ட இந்த க்ஷயரோக விடுதியோடு இதுவரை இந்த மாநிலத்தில் நான்கு க்ஷயரோக விடுதிகள் மூடப்பட்டு விட்டன. இப்போது கடைசியாக மூடப்பட்ட ஆஸ்பத்திரி 85 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது.

'நாட்டுப் பிரிவினை—நன்மையா-தீமையா ?'

22—10—54-ல், மதுரை தியாகராசர் கல்லூரி, இளங்கோ மன்றச் சார்பில், திருமதி தியாகராசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், "நாட்டுப் பிரிவினையால் நன்மையா? தீமையா?" என்ற தலைப்பில் மாணவர்கள் சொற்போர் நிகழ்த்தினர். தோழர்கள் சுப்பையா, பாதமுத்து ஆகியோர் பிரிவினையால் ஏற்படும் துன்ப நிலை குறித்துப் பேசி, ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்தினர். 'பிரிவினை தீமை தராது—நன்மை தரும்' என்ற விதத்தில், ஹாஜா முகைதீனும், எஸ். ஆர். காளியப்பனும் தென்னடு, வடவர் ஆதிக்கப்பிடியிலகப்பட்டு, வாழ்விழந்து, வதைக்கப்படும் விதத்தை எடுத்துக் கூறினர்.

இறுதியில், தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, 'பிரிவினை தீமை பயக்கும்' என்ற திட்டத்திற்கு 200-க்கும் அதிகமான மாணவர் கூடிய கூட்டத்தில், 14 பேர்களே ஆதரவளித்தனர்.

ஆகவே கூட்டத்தில் நாட்டுப் பிரிவினை வேண்டும் என்பது பலமாக ஆதரிக்கப்பட்டது.

சர்வகலாசாலையின் 200-வது ஆண்டு விழா

47 - பேருக்குக் கௌரவப் பட்டம் வழங்கும்

இந்திய உப - ஜனதிபதி ராதாகிருஷ்ணன் உட்பட உலகத் தலைவர்கள் 47 பேருக்கு கொலம்பியா சர்வ கலாசாலை கௌரவப் பட்டங்கள்வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஆண்டில் தனது 200-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் கொலம்பியா சர்வ கலாசாலையில், இந்தப் பட்டமளிப்பு விழா அக்டோபர் 31-ல் நடக்கும்.

வடநாட்டு அகதிகளின் பேராசை!

கொடுக்கப்படும் நஷ்ட ஈடு காணாதாம்!

தொழிற்சாலைகளைச் சொந்தமாக்கித் தர கோரிக்கை!

மேற்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்து அகதிகள் என்ற பெயரில் வாழும் இடம் பெயர்ந்தோர்களின் மாநாடு ஒன்று இரண்டு நாட்கள் நடைபெற்றிருக்கிறது.

அந்த மாநாட்டில், இந்திய அரசாங்கம், 'இடம் பெயர்ந்தோர் தொகையில் 90 சத விகிதத்தினருக்குப் புனர்வாழ்வு தந்துவிட்டதாகச் சொல்வது தவறு' என்று கண்டிக்கப்பட்டிருக்கிறது.

திவான் சமன்லால் என்ற மக்கள் சபை உறுப்பினர் ஒருவர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கியிருக்கிறார். இடம் பெயர்ந்தவர்கள் எல்லோருக்கும் வாழ்வு தருவதாகவும், இதுவரை எத்தனை பேருக்கு வாழ்வு தரப்பட்டிருக்கிறது என்பதை ஆராயும் பொருட்டும் மத்திய அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டுமெனவும் பேசப்பட்டிருக்கிறது.

"இடம் பெயர்ந்த மக்களுக்கு நஷ்ட ஈடு தருவது பற்றிய சர்க்காரின் திட்டம் ஏமாற்றம் தருவதாயும், போதுமானதாக இல்லாமலும் இருக்கிறது; இடம் பெயர்ந்த மக்களுக்கு முழு நஷ்ட ஈடு தந்தால் தான் அவர்கள் திருப்தியடைவார்கள். அந்த நஷ்ட ஈடு தருவதற்கான காலமும் வரையறுக்கப்பட வேண்டும்," என்று தலைவர் தனது உரையில் வற்புறுத்தியுள்ளாராம்.

கிராமப் பகுதிகளிலிருந்து நஷ்ட ஈடு கோரியிருப்பவர்களின் நஷ்ட ஈடுத் தொகையில் 50 சத விகிதத்தைக் குறைப்பது என்ற சர்க்காரின் முடிவை மாநாடு கண்டித்து நிராகரித்துவிட்டிருக்கிறது.

"பலதரப்பட்ட வகையில் நஷ்ட ஈடு கோரியுள்ள அகதிகளிடையே வீணான பிளவுகளை அது உண்டு பண்ணும்," என்று மாநாடு கருத்தறிவிக்கிறதாம்.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு ஓடிப்போனவர்கள் காலி செய்து விட்டுப்போன தொழிற்சாலைகளை, அங்கிருந்து வந்த அகதிகள் சர்க்கார் உதவியுடன் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார்கள் அல்லவா? அந்தத் தொழிற்சாலைகளையெல்லாம், அந்த அகதிகளுக்கே, அரசாங்கம் சொந்தமாக்கித் தந்துவிட வேண்டுமெனவும் மாநாட்டினர் வற்புறுத்தியுள்ளனர்.

அசாம் கவர்னரிடம் "அகதிகள் முறையீடு!

உல்லாச வாழ்வு பெற உயர்ந்த உத்தியோகம் வேண்டுமாம்!

"ஷில்லாங் நகரத்தில் குடியேறியுள்ள அகதிகளில் படித்தவர்கள் 300 பேர்கள் வேலை ஏதுமின்றி இருக்கிறார்கள்; இவர்களில் யாருக்கும் கடந்த 1950-ம் ஆண்டுமுதல் சர்க்கார் அலுவலகங்களில் உயர் பதவிகள் தரப்படவில்லை; இவர்களுக்கு வேலை தருவதில் மறைமுகமான பாரபட்சம் காட்டப்படுகிறது; வடகிழக்கு எல்லைப்புற நிர்வாகத்தில், இடம் பெயர்ந்த அகதிகளில் படித்த தகுதி உடையவர்களுக்கு வேலை தரப்பட வேண்டும்,"

—என்று, ஒரு மகஜர் மூலம், காசி, ஜெயின்ஷியா பிரதேச அகதிகள் சங்கத்தின் தலைவரான ஹெம்சந்திர தத்தா என்பவர் தலைமையில் சென்ற தூதுக் குழு, அசாம் கவர்னரான ஜெயராம்தாஸ் தௌலத்ராமிடம் முறையிட்டுள்ளது என்று தெரிகிறது.

கவர்னர், முறையீட்டிற்கு பதிலிறுக்கையில், "ஏற்கனவே வடகிழக்கு எல்லைப்புற நிர்வாகத்தில் 219 அகதிகளுக்கு வேலை தரப்பட்டுள்ளதென்றும், எனவே, மத்திய அரசாங்கத்திடம் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் அகதிகளுக்கென வேலை ஒதுக்கித் தரப்பட வேண்டுமென முறையிடுங்கள்" என்று உபதேசித்ததாகவும் தெரிய வருகிறது.

மானங்காக்க மரணத்தைத் தழுவிய மாணவன்!

'செய்யாத குற்றத்திற்கு' காவலில் வைத்தார்களாம்!

போலீஸ் ஸ்டேஷனிலேயே தூக்கிட்டுக்கொண்டான்!

காட்மண்டு—

ஒரு சைக்கிளைத் திருடியதாகக் குற்றம் சுமத்தி 17 வயதுடைய ஒரு பள்ளிப் பையனை போலீசார் பிடித்துக் காவலில் வைத்திருந்தனர். அச்சிறுவன் மானம் தாளாது போலீஸ் ஸ்டேஷனிலேயே தூக்கிட்டுக் கொண்டு உயிரை மாய்த்துக் கொண்டதாக செய்தி வெளியாகியுள்ளது.

மோகன்லால் என்ற அந்தப் பையனை மார்க்கெட்டிலிருந்து ஒரு சைக்கிளைத் திருடினான் என்று போலீசார் கைது செய்தனர்.

சைக்கிளைத் தான் திருடவில்லையென்றும், யாரோ ஒருவன் சைக்கிளை சாலை ஓரமாகக் கிடத்தி விட்டு வேகமாக ஓடிவிட்டதாகவும், அதைப் பார்த்த தான், சைக்கிளைத் தூக்கி நிறுத்திக்கொண்டிருக்கையிலேயே போலீசார் தன்னைக் கைது செய்ததாகவும் போலீசாரிடம் கூறினான்.

போலீசார் அவனது கூற்றை நம்ப மறுத்து, காவலில் வைத்தனர்.

போலீசார், அச்சிறுவனைக் காலையில் சென்று பார்த்தபோது, போலீஸ் ஸ்டேஷனிலேயே அச்சிறுவன், தனது 'பெல்டி'னால் சுருக்கிட்டுக் கொண்டு தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துக்கொண்டிருப்பதைக் கண்டனர்.

அவனிடமிருந்த கடிதமொன்றில், தான் செய்யாத குற்றமொன்றிற்காகத் தன்னைக் காவலில் வைத்திருப்பதாகவும், அது தனக்கு பெருத்த அவமானமாக இருப்பதாகவும், ஆகவே, தான் தற்கொலை செய்து கொள்வதாகவும் எழுதியிருந்தானும்.

ஒரே பாதையில்...

தகுந்த நேரத்தில், ரஷியா உண்மையாகவே விரும்பும்போது, அதனுடன் பேச்சு வார்த்தைகள் நடத்த அமெரிக்கா தயாரென்றும், நான்கு வல்லரசுப் பேச்சுக்கு இது தருணமல்லவென்றும் அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர் தெரிவித்திருக்கிறார்.

குறிப்பு: பிரிட்டிஷ் முதலமைச்சர் சர்ச்சிலும் இவ்வாறே கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அன்பளிப்பு

கொழும்பு, அக். 25—

இம்மாதம் 31-ந் தேதியன்று யாழ்ப்பாணத்தில் தமக்கு அளிக்கப்படவிருக்கும் வரவேற்பு ஒன்றின்போது, இலங்கையின் இந்தியத் தூதுவர் சி. சி. தேசாய், இந்திய சர்க்கார் சார்பில் யாழ்ப்பாணத்தில் ஒரு நூல் நிலையம் அமைக்க ரூ. 10,000 நன்கொடையாக அளிப்பார்.

"அக்காலத்தில் 'மறுமணம்' வழக்கத்திலிருந்தது"

"தமயந்தியின் இரண்டாம் 'சுயம்வர' அறிவிப்பே தக்க சான்று"

"நளன் செய்கையை இக்காலச் சட்டம் ஒப்புக்கொள்ளாது"

கலைத் துறை மறுமலர்ச்சி பற்றி எம். ஜி. ஆர்.

"மறுமலர்ச்சி என்பது சாய்ந்த மரம் தளிர்விட்டு ஓங்குவது தான்; அழிக்கப்பட வேண்டியதை அழித்து, புத்துயிர் பெற்றெழுவதுதான் மறுமலர்ச்சி."

"மனிதனது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதே கலை. பேச்சாலும், சித்திரம்எழுதுவதாலும், பாடுவதாலும், நடிப்பாலும் ஏற்படும் இந்தக் கலையிலும் தற்போது மறுமலர்ச்சி தோன்றியுள்ளது."

"நடிகன், தனது நடிப்பால் சமூகத்திலே ஒரு மலர்ச்சியை உண்டுபண்ணிக் காட்டுகிறான். முன்னைய நாட்களில், கலை மூலமாகப் புராணங்கள்தான் மக்களிடையே புகுத்தப்பட்டன. மனித சமுதாய முன்னேற்றத்திற்கான பல சட்டங்கள் உண்டாக்கப்பட்டும், அன்றைய சமுதாயத்திலுள்ள பெரியோர்கள் சொன்னதுதான் சட்டமாக இருந்தது. ஆனால், அந்தக் கட்டுப்பாடு — சமயவரையறை உடைக்கப்பட்டு விட்டது. இப்போதோ, கலையில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது."

இவ்வாறு, நடிகர் தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள், சென்ற 22-ந் தேதியன்று திருவனந்தபுரம் இடைநிலைக் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கத்தின் திறப்புக் கூட்டமொன்றில் 'கலையில் மறுமலர்ச்சி' எனும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:—

"நளன், தன் மனைவி தமயந்தியைக் காட்டில் தன்னந் தனியாக விட்டு விட்டுப் பொறுப்பற்ற முறையில் ஓடிவந்து விட்டான்; 'இது, சனீஸ்வரன் நளனுக்குக் கொடுத்தத் தொல்லையாகும்; எனவே அது மன்னிக்கப்பட வேண்டியதாகும்' என்று கூறப்படுவது நியாயமாகுமா? இது மன்னிக்கப்படக் கூடாத ஒரு காரியமாகும். அன்று செய்த காரியத்தை இன்று செய்தால் சட்டம் அதை அனுமதிக்காது.

"மேலும், அந்தக் கதையில் காணப்படும் 'மறுமணம்' எனும் சீரிய கொள்கை மறைக்கப்படுகிறது. அதாவது, நளனைப் பிரிந்த தமயந்தி, கஷ்டப்பட்டுத் தன் தாய் தகப்பனைச் சேர்ந்த பின், நளனைப் பலகாலமாகக் காணாத காரணத்தால் தமயந்திக்கு மறுமணம் செய்விக்க ஏற்பாடாகிறது. இதில் நாம் அதிகமாகக் கவனிக்க வேண்டியது, இரண்டு குழந்தைகள் பெற்றெடுத்த தமயந்திதான் மறுமணம் செய்து கொள்ளவிருக்கிறாள் என்பது. எல்லா அரசர்களுக்கும் மண ஓலை அனுப்பப்படுகிறது; அரசர்கள் யாவரும் வருகின்றனர். அதே நேரத்தில், நாம் கவனிக்க வேண்டியது, தமயந்தி இரண்டு குழந்தைகளுக்குத் தாய் என்று எல்லா அரசர்களுக்கும் தெரிந்த ஒரு விஷயம் என்பது தான். அப்படியானால், 'மறுமணம்' என்ற வழக்கம் அந்தக் காலத்திலும் தான் இருந்திருக்கிறது. இல்லையென்றால், இரு குழந்தைகளுக்குத் தாயான தமயந்திக்கு 'மறுவிவாகம்' என்ற மணவோலை கண்டதும் அவளை மணக்க முற்பட்டுக் கொண்டு பிற அரசர்கள் ஓடோடியும் வருவார்களா? ஆனால், அந்த மறுமணம் மறைக்கப்பட்டு விட்டது. தமயந்தியை அனாதையாக்கி விட்டு அவளைக் காப்பாற்றத் தகுதியற்ற நளனை விலக்கிவிட்டு, அவளுக்கு மறு விவாகம் செய்துவைக்கப் பெற்றோர்கள் தீர்மானித்து நடத்திய மணப் பந்தலிலே, மீண்டும், நளன் வந்து, தனது தவறை உணர்ந்து தமயந்தியைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டு விட்டான் என்று கதை கட்டி விடப்பட்டிருக்கிறது.

எவ்வாறாயினும், அந்தக் காலத்திலும்கூட 'மறுமணம்' என்ற ஒரு சீர்திருத்த முறை இருந்து தான் வந்திருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இந்தக் கதையை சனீஸ்வரனின் திருவிளையாடல்களை நீக்கிவிட்டு, சீர்திருத்தக் கருத்துக்களுடன் மாற்றியமைக்கலாம், மாற்றியமைக்க எங்களைப் போன்றவர்களுக்கு உரிமையும் கடமையும் உண்டு. எனவே, அக்கதையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தலாம்.

"வள்ளித் திருமணத்தில் மனிதன் மரமாக மாறியதாகவும், மரம் மனிதனாக மாறியதாகவும் கூறப்படுகிறது. இது விஞ்ஞானிகளால் ஒருக்காலும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது."

எனவே, கடவுளை இழிவுபடுத்தாமல், கடவுளின் கயமைத்தனங்களை இகழ்ந்து, கலை மூலம் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும்."

தோழர் சி. பி. சிற்றரசுக்கு நிதியளிப்பு

17—10—54 காலை 10 மணிக்கு மதுரை மீனாட்சி டாக்கீசில், தோழர் சி. பி. சிற்றரசு உடல் நலப் பாதுகாப்பு நிதி சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் டாக்டர் அருணாசலம் தலைமையில் நடைபெற்றது.

தோழர் டி. கே. தாமரைச் செல்வன், தோழர் சி. பி. சிற்றரசு அவர்களின் தொண்டினையும், இப்பொழுது அவர் உடல்நலப் பாதுகாப்பு நிதி கொடுக்கும் மதுரை நகர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்களின் கடமை உணர்வையும், பெருமுயற்சியையும் பாராட்டிப் பேசினார்.

பின்னர், தோழர் சி. பி. சிற்றரசு அவர்களுக்கு தோழர் எஸ். முத்து அவர்களால், மதுரை தி. மு. கழகச் சார்பில் ரூ. 300 கொண்ட பணமுடிப்பு அளிக்கப்பட்டது.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் 'சுதந்திரத் தந்தை ரூசோ' என்பது பற்றிப் பேசினார். கூட்டத் துவக்கத்தில் தோழியர் பி. எஸ். செல்வா, சி. ஆர். சௌந்திரராசன் குழுவினரின் இன்னிசை நடைபெற்றது.

காரணம் என்ன?

"கல்வி பரவியிருப்பதற்குக் காரணம், அந்தந்த இடத்து ராஜ்ய, ஸ்தல ஆட்சிகள் தத்தம் பள்ளிகளையும், கல்லூரிகளையும் தானே பொறுப்பேற்று ஸ்தாபித்திருப்பதே யாகும்: நெடு நாளாக ஏற்பட்டிருக்கும் இந்த நடைமுறைதான் இந்த நாட்டின் ஆற்றலுக்குப் பெரிதும் காரணமாகும்,"

என்று, அமெரிக்க சுகாதாரம், கல்வி, பொதுநலம் ஆகியவற்றின் அரசாங்க இலாகாவின் துணைச் செயலாளர் கூறியுள்ளார்.

திராவிட மறுமலர்ச்சிக் கழகம் (தி. மு. க. கிளை)

17—10—54 இரவு 9-45 மணியளவில் கே. கண்ணன் தலைமையில் நடைபெற்ற சின்னகாஞ்சிபுரம் திராவிட மறுமலர்ச்சிக் கழக நிர்வாகக் குழு கூட்டத்தில், கழகத் தோழர் கே. அருணாசலம், கவிமணி தேசிகவினாயகம், குமாரவேல் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், திரு-தமிழக இணைப்புப் போராட்டத் தோழர்களுக்குப் பாராட்டுதல் தெரிவித்தும் கழகத்தின் 6-வது ஆண்டு விழாவை வருகிற நவம்பர் திங்கள் இறுதியில் நடத்துவதென்றும், அவ்விழா நடைபெறுவதற்குப் பொருளுதவி தந்து உதவுமாறு 'மறுமலர்ச்சி நூல் நிலைய' அமைப்புக் குழுவினரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கருணாநிதி நாடக மன்றம்

24—10—54 இரவு 9 மணிக்கு நடைபெற்ற கரூர் கருணாநிதி நாடக மன்ற செயற்குழு கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: கே. பி. பஷீர்; துணைச் செயலாளர்: எஸ். சுப்ருயலு; பொருளாளர்: பி. தசரதன்; மற்றும் 7 பேர் கொண்ட செயற் குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். விரைவில் கருணாநிதி தீட்டிய நச்சுக் கோப்பை என்னும் நாடகத்தை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

அண்ணா படிப்பகம்

25—10—54 மாலை 6 மணியளவில் அய்யப்பநாயக்கன்பட்டியில் தோழர் வீ. பெரியகருப்பன் தலைமையில், தோழர் ஆ. குருசாமி அவர்களால் அண்ணா படிப்பகம் திறந்து வைக்கப்பட்டது. தோழர் மாரியப்பன் கொடியேற்றிவைத்தார். தோழர்கள் மாரியப்பன், ஆ. குருசாமி, வீ. துரைசாமி, பெ. சன்னாசி, ரா. பிச்சை ஆகியோர் கழகக் கொடியின் லட்சியம் பற்றியும், படிப்பக, கழக முன்னேற்றங்கள் பற்றியும் பேசினர்.

தாய் எட்டடி பாய்ந்தால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விகிதம் ஒன்றுக்கு இரண்டு (1 : 2) என்ற விகிதப்படி இருப்பார்கள். பெரும்பான்மை தமிழர்கள், இந்த இணைப்பு யோசனையை எதிர்த்து வருவதே, இந்தத் திட்டத்தை நிராகரிக்கப் போதுமானதொரு காரணமாகும்.

"மேலும், சென்னை மாநிலத்தை விட, திரு—கொச்சி மாநிலத்தின் கல்வி, போக்குவரத்து, மருத்துவ வசதிகள் ஆகியவை அதிக முன்னேற்றம் கொண்டு நிற்கின்றன. அப்படிப்பட்ட திரு — கொச்சி மாநிலம் சென்னையுடன் இணைக்கப் படுவதாக இருந்தால், திரு — கொச்சி, மலபார் ஆகியவற்றிலுள்ள இந்த முன்னேற்றங்கள் யாவும் தடைப்பட்டு, பின்தங்கி விடும். சென்னை மாநிலம் பெரியதோர் மாநிலமாகும். அதுபோலவே, திரு—கொச்சி மாநிலமும், மக்கள் தொகை அதிகமாகக் கொண்டதொன்றாகும். ஆகவே, இவ்விரு மாநிலங்களும் இணைக்கப் பட்டால், அரசாங்க நிர்வாகங்களிலே ஊழல்கள் ஏற்பட்டு அவற்றைச் சுலபமாகச் சமாளிக்க முடியாமல் போய்விடும். எனவே, இந்த இணைப்பு யோசனையை, திரு—கொச்சி காங்கிரசுக் குழு எதிர்க்கிறது."

திரு—கொச்சி மாநில ஆட்சியின்கீழ் இருந்துவரும் தமிழ்ப் பகுதிகளான சித்தூர், தேவிகுளம், பீர்மேடு, செய்யாற்றங்கரை, விளவன்கோடு, கல்குளம், அகஸ்தீசுவரம், தோவாளை ஆகிய 9 தாலுகாக்களையும், சென்னை மாநிலத்துடன் இணைக்க வேண்டுமென்று மாநில புனரமைப்புக் குழுவிடம் தமிழ் நாடு காங்கிரஸ் குழுவும், சென்னை சர்க்காரும் கேட்டுக் கொண்டதை எதிர்த்து, திரு—கொச்சி காங்கிரஸ் குழு, அந்த மனுவில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"அவ்வாறு செய்வது நேர்மையற்ற செய்கையாகும் தமிழ்ப் பகுதிகள் திரு—கொச்சி மாநிலத்திலிருந்து பிரிக்கப்படுகிற வகையில், அது கேரள மாநிலத்திற்கே பெரியதோர் பாதகம் விளைவிப்பதோடன்றி, அந்தத் தாலுகாக்களில் வசிக்கும் மக்களையும் பாதிக்கும். இந்தப் பிரச்சினைக்கு மொழி ஆதாரம் இருப்பினும், பூகோள, சரித்திர, நிர்வாக, பொருளாதார காரணங்களும் சிந்திக்கப்பட வேண்டும். அவ்வாறு சிந்திக்கப்படுங்காலையில், இந்தப் பிரச்சினைக்கு ஒரு காரணமும் இருக்காது ;

"தமிழ்ப் பகுதிகளில், தேவிகுளம், பீர்மேடு, அகஸ்தீசுவரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு ஆகிய தாலுகாக்கள்தான் கேரள மாநிலத்திற்கே அத்தியாவசியமான பகுதிகளாகும் ;

"தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களில் தோட்டத் தொழில்கள் தான் அதிகம். இந்தப் பகுதிகளில் தான் கேரள மாநிலத்தின் கோடை வாசஸ்தலங்கள் அமைந்துள்ளன. மேலும், தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களிலிருந்து ராஜ்யத்திலுள்ள எல்லா முக்கிய நதிகளும், உற்பத்தியாகி, அவற்றிலிருந்து ஹைடிரோ—எலெக்ட்ரிக்ஸ் (தண்ணீரிலிருந்து மின்சார சக்தி) தயாரிக்கப்படுகிறது.

"ஆக, மின்சாரம், தோட்டத் தொழில் ஆகியவற்றிற்கு இவ்விரண்டு தாலுகாக்களும் தான் கேந்திர இடங்களாகும். இவற்றைப் போலவே, உப்பளங்கள், ஏராளமான நெல் வயல்கள், மீன் பிடிக்குமிடங்கள் ஆகியவற்றைக் கொண்ட மற்ற நான்கு தாலுகாக்களும் கேரளத்திற்கு அவசியமான தாலுகாக்களாகும்."

த.நா.கா.க. தலைவரின் எதிர்ப்பு!

"திரு—கொச்சியிலுள்ள 9 தமிழ் தாலுகாக்களையும் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை என்று திரு—கொச்சி காங்கிரஸ் குழு, மாநில புனரமைப்புக் குழுவிடம் தெரிவித்திருப்பது எனக்கு ஆச்சரியத்தையே உண்டு பண்ணுகிறது ; அந்த 9 தாலுகாக்களும் சென்னை மாநிலத்துடன் (தமிழ் நாட்டுடன்) இணைக்கப்படுவதால் அந்தத் தாலுகா வாசிகளுக்கு எந்த விதத் தீங்குகள் நேரிடும் என்பது எனக்குத் தெரியவில்லை!" என்று, த. நா. கா. குழுவின் தலைவர் எல். எஸ். கரையாளர், திரு-கொச்சியின் மனுவின் கோரிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது :—

"இந்த 9 தாலுகாக்களிலுமுள்ள 99 சதவிகித தமிழ் மக்கள் அப்பகுதிகள் சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட்டாக வேண்டும் என்ற தங்கள் முடிவை, சென்ற தேர்தலின்போது வெளிப்படுத்தி விட்டார்கள். அதுமட்டுமல்லாமல், இப்பகுதி வாழ் மக்களின் கலாசாரங்களுக்கும், திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட மக்களின் கலாச்சாரங்களுக்கும் உள்ள தொடர்புகளை நன்கு கவனித்தால், அவற்றிடையே காணப்பெறும் நெருங்கிய உறவு தெரியவரும்."

தேவிகுளம், பீர்மேடு பகுதிகளில் தொழிலாளிகளே பெரும்பான்மையினராக வசிக்கின்றனர் என்று கூறப்படுவதை கரையாளர் மறுத்துவிட்டுப் பின்னர் பேசுகையில், "அரசியல் துறையில் தமிழ் நாடு, திரு—கொச்சியைவிட எவ்வளவோ முன்னேறிச் சென்று விட்டதென்றும், மேலும் திரு—கொச்சி மாநிலத்தை சென்னை அரசாங்கத்துடன் இணைப்புப்படுத்தினால், சென்னை மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு அது ஒரு இடையூறாகத்தான் இருக்கும்" என்றும் கூறியிருக்கிறார் !

அதிகாரிகளாய்..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வழக்கின் விபரமாவது :—

நிர்மல் குமார் கோஷ் என்ற ஒரு வியாபாரி, தனது வேலையாள் ஒருவரை ஜாமீனில் வெளிக் கொண்டு வருவதற்காக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். அந்த நேரத்தில் பொறுப்பிலிருந்த சக்ரபர்த்தி என்ற போலீஸ்காரரிடம், தனது வேலையாளை வெளிக் கொணர தான் ஜாமீனாக ஏற்க தனது வியாபார 'லைசென்ஸ்' போதுமானதென்று இன்னொரு போலீஸ்காரர் கூறியதாக நிர்மல் கோஷ் குமார், கூறினார்.

'போலீஸ்காரர் பெயரைச் சொல்லி என்னைச் சரிக்கட்டப் பார்க்கிறாயா?' என்று, சக்ரபர்த்தி சீறினார்.

உடனே கோஷ், போலீஸ்காரரிடம் 'சற்று நாகரீகமாக நடந்து கொள்ளுங்கள்,' என்று கூறியிருக்கிறார்.

ஆனால், போலீஸ்காரரோ, மேலும் கோபமடைந்தவராய், வாயிலிலிருந்த சிப்பாயை அழைத்து, நிர்மல் கோஷ் குமாரைக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டு விட்டார்.

மறுநாட் காலையில், கோஷ், ஜாமீனில் விடுவிக்கப்பட்டு, கலகமூட்டும் வகையில் நடந்துகொண்ட குற்றத்திற்காக அவர்மீது வழக்குப் பதிவு செய்திருப்பதாகவும் அவரிடம் சக்ரபர்த்தி கூறியிருக்கிறாரெனத் தெரிகிறது.

இந்த வழக்கை விசாரித்துவிட்டுத்தான் மாகாண நீதிபதி மேற்கண்டவாறு தீர்ப்பளித்தாராம்.

இவ்வருடத்திய நோபல் இலக்கியப் பரிசு ரூ. 12,500 பவுன்கள், அமெரிக்க நாவலாசிரியர் எர்னஸ்ட் ஹெமிங்ஸ்வேக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

நெடுஞ்செழியன்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமான நிலையத்தில் தோழர்கள் என். வி. நடராசன், கண்ணதாசன், நாஞ்சில் ஜான், காஞ்சி மணிமொழியார் கண்ணபிரான், பி. ராமசாமி, ராசேந்திரன் டி. வி. நாராயணசாமி, டபிள்யு கே. தேவராசன், சி. வி. ராஜகோபால், அ.பொ. அரசு, நலங்கிள்ளி, க.சிதம்பரம், எம். எஸ். முத்து, எம். என். கிருட்டிணன், ராதாகிருஷ்ணன், அருண்மொழியன், ல. கிருட்டினன், மாரி, சி. ஆர். பாலசுந்தரம், பாலகிருஷ்ணன், குன்றத்தூர் சம்பந்தம், பணிச்சேரி கோவிந்தன், திருச்சி அருணகிரிதாஸ், சிறுமி பானுமதி ஆகியோர் தோழர் நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்கும் விழாவில் கலந்துகொண்டனர்.

சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் அழகான கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றார்.

சென்னை மாவட்டத்தின் 1-வது வட்ட செயலாளர் ல. கண்ணன், 2-வது வட்ட செயலாளர், 3-வது வட்ட செயலாளர் நரசிம்மன், 4-வது வட்டச் செயலாளர் சேதுராமன், 5-வது வட்ட செயலாளர் நலங்கிள்ளி, 6-வது வட்ட செயலாளர் சானகிராமன், 8-வது வட்ட செயலாளர் வானவரம்பன், 10-வது வட்டம் ஏ. ஆர். சேஷாசலம், 12-வது வட்ட துணைச் செயலாளர் யூசுப், 14-வது வட்டச் செயலாளர் செங்குட்டுவன், 15-வது வட்ட செயலாளர் : ம. க ஆனந்தன், 17-வது வட்டம் பாலன், 18-வது வட்ட செயலாளர் : கோ. கேசவன், 19-வது வட்டம் மு. சண்முகம், 20-வது வட்ட செயலாளர் ஏகாம்பரம், 21-வது வட்டச் செயலாளர் காசி, 24-வது வட்டம் மோகன், 29-வது வட்டம் ப. க. வேணு, 32-வது வட்ட செயலாளர் மணி; 34-வது வட்டம் பாலசுப்பிரமணியம், 35-வது வட்ட செயலாளர் வில்லவன், 42-வது வட்ட செயலாளர் கண்ணன், 43-வது வட்ட செயலாளர் புரட்சிமணி, 44-வது வட்ட செயலாளர் மதியழகன்; மற்றும் ஏ. வி. ஆறுமுகம், (திருவொற்றியூர் தி. மு. க. செயலாளர்) மு. ராசன், (கொடுங்கையூர் தி. மு. க. செயலாளர்), செங்குன்றம் தி. மு. க. செயலாளர்,......கே. எஸ். அருணாசலம், (தி. மு. க. துணைச் செயலாளர், ஆலந்தூர்.) ஆகிய கழகத் தோழர்களும், தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு மலர் மாலைகள் அணிவித்தும், கைத்தறி ஆடைகள் போர்த்தியும் மகத்தான வரவேற்பளித்தனர்.

முத்தியால்பேட்டை முத்தமிழ் மன்றம், மறைமலையடிகள் நூல் நிலையம், முரசொலி பதிப்பகம், ஆதம்பாக்கம் திரு. வி. க. படிப்பகம், வண்ணை வள்ளுவர் மன்றம், பெரம்பூர் அறிவியக்க மன்றம்; நுங்டேரி வ. உ. சி. மன்றம், திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகம், அறிவியக்க மன்றம், தோழமைக் கழகம் ஆகியவற்றின் சார்பிலும், மலர்மாலைகளும் கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பெற்றன.

இத்தனைக்கும் மேலாக, பல நூற்றுக்கணக்காக கழகத் தோழர்களும், பொதுமக்களும் விமான நிலையத்தில் கூடி, மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலி கூட்டி துணைச் செயலாளரை வரவேற்ற காட்சி வெகு அழகாயிருந்தது.

பெங்களூர் பிளாக்பள்ளி தி. மு. கழக பொதுக் குழு உறுப்பினர்களுக்கு

31—10—54 காலை 9 மணிக்கு பெங்களூர் பிளாக்பள்ளி தி. மு. கழகத்தின் பொதுக் குழு, கப்பன் பூங்காவில் மூங்கில்தீவில் தோழர் என். வி. லிங்கம் தலைமையில் கூடும். அதுபோது எதிர்காலத்தில் நிகழ்த்த வேண்டிய ஆக்க வேலைகளைப் பற்றியும், கர்நாடக தி. மு. கழக மாநாடு சிறப்புற கழகம் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றியும் ஆராயப்படும்.

கோவை மாவட்ட கிளைக் கழகத் தோழர்களுக்கு அறிவிப்பு

"பாலகிருஷ்ணன் என்ற ஒரு நபர் நான் அனுப்பியதாகக் கூறி, சூலூர் முதலிய கிளைக் கழகத்தாரை ஏமாற்றிப் பணம் வாங்கிச் சென்றதாகத் தெரிகிறது ; எனவே, கோவை மாவட்டத்திலுள்ள கிளைக் கழகத் தோழர்கள் இது விடயத்தில் எச்சரிக்கையாக இருப்பதுடன், பாலகிருஷ்ணன் என்ற நபர் எந்த ஊருக்கு வந்தாலும் போலீசாரிடம் ஒப்படைக்க வேண்டுகின்றேன்."

ஈ. வெ. கி. சம்பத்,
கோவை மாவட்ட தி.மு.க. செயலாளர்.

கல்கத்தாவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிக் கைது செய்யப்படும் இளைஞர்களின் பெற்றோர்கள் தரும் உறுதி மொழியின் பேரில் இவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். ஒரு சில நாட்கள் போலீசாரின் கொட்டடியில் அடைபட்டுக் கிடக்கும் அனுபவம், இந்த இளைஞர்களை திருத்தப் போதுமானதாக இருக்கிறதாம்.

இதுபோன்ற சமுதாயத்தில் குற்றம் புரிவோரை கைது செய்யவும், இவர்களிடமிருந்து பொது மக்களைக் காப்பாற்றவும் சென்ற ஜூலையில் அமைக்கப்பட்ட 'குண்டர்கள் எதிர்ப்பு போலீஸ் படை'யினர், சிறந்த சேவை செய்கின்றனர் என்று கூறப்படுகிறது.

போலீஸ் நடவடிக்கைகளினால் மட்டுமே இந்தக் குறைபாடுகளைப் போக்க முடியாது என்றும், இதுபோன்ற சமூக விரோத செயல்கள், மக்களிடையே ஆழப் பதிந்துள்ள சமூக, பொருளாதார குறைபாடுகளால் ஏற்படுகின்றன என்றும், அக்குறைகள் நீக்கப்பட்டால் ஒழிய, பயன் ஏதும் இல்லை

இக்குறைபாடுகளால், மக்கள் முதலில் சிறு குற்றங்களைப் புரிய தூண்டப்பட்டு, பின்னர் பயங்கரக் குற்றங்களைப் புரிய முனைகிறார்கள் என்று கருதப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் வங்க மத்திய தர வகுப்பில் வேலையில்லாது துன்புறுவோர் தான் என்று போலீஸ் படையின் அதிகாரி கூறியுள்ளார்.

இலாபகரமான வேலைகள் அளிக்கப்பட்டால் இவர்கள் நல்ல குடி மக்களாக மாறுவர் என்றும் அவர் கருதுகிறார்.

இவ்வாறு, சமூக விரோதமான செயல்களில் இளைஞர்கள் பலர் ஈடுபடுவதின் காரணம், அவர்களது ஓய்வு நேரத்தைப் போக்க நல்ல சிறந்த பொழுதுபோக்கு நிலையங்களோ, விளையாட்டுகளுக்கான வாய்ப்புக்களோ இல்லாதது தான் !

விளையாட்டுக் கூடங்களுக்கோ, அல்லது நூல் நிலையங்களுக்கோ, செல்லும் இளைஞர்கள் மிகச்சிலரே. இவர்களுக்குச் சென்று உள்ள ஒரே ஒரு பொழுதுபோக்கு நிலையம் சினிமாக்கள்தான்; ஆனால், இவைகளில் பெரும்பாலானவை கீழ்த்தர எண்ணங்களைத் தூண்டுவதாக உள்ளன என்று பலர் கருதுகின்றனர்.

கைதி தற்கொலை!

மூளைக் கோளாறு காரணமாக, கொல்லம் மருத்துவ மனையொன்றில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவர், தப்பி ஓடி ஒரு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டாராம். இது சம்பந்தமாக இரண்டு போலீஸ் கான்ஸ்டபிள்கள் 'சஸ்பெண்டு' செய்யப்பட்டார்களாம் !

1947-ம் ஆண்டின் கடைசியிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்த அமிர்தசரஸ்—லாகூர் : (மேற்கு பாகிஸ்தான்) ரயில் போக்குவரத்து, 7 ஆண்டுகளுக்குப்பின் இப்போது மீண்டும் திறந்துவிடப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டம்

★

திருப்பத்தூர் (வ. ஆ.)
சந்தைப்பேட்டை மைதானத்தில்
31-10-54 மாலை **6-30** மணிக்கு
தலைவர் :
கே. பி. ராமநாதன், எம்.சி.
பேசுபவர் :
முகவை ஆர். எஸ். பாண்டியன்

சென்னைத் திருவள்ளுவர் கழகம்

30—10—54 மாலை 6½ மணிக்கு சென்னை, புரசை பெரியசாலையிலுள்ள அன்னதான சமாஜ மண்டபத்தில், தோழர் வே. த. அர்ச்சுனனார் 'திறக்குறளில்-மெய்யுணர்தல்' என்பது பற்றிப் பேசுவார்.

சென்னை மாணவர் மன்ற பாப்பா போட்டி

30—10—54 மாலை 2 மணிக்கு கடை வீதி-மயிலாப்பூர், திருவல்லிக்கேணி ஆகிய இடங்களிலுள்ள நகராண்மைக் கழகப் பெண்கள் பள்ளிகளிலும், நுங்கம்பாக்கத்திலுள்ள நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியிலும், 31—10—54 மாலை 2 மணிக்கு கொண்டித்தோப்பு, வண்ணாரப் பேட்டை, புரசைவாக்கம் ஆகிய நகராண்மைக் கழக ஆண்கள் பள்ளிகளிலும், பெரம்பூர் பாரதமாதா உயர்தர பள்ளியிலும் 1 முதல் 5-வது வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளின் பாட்டு, பேச்சு, கதைப் போட்டிகள் நடைபெறும்.

தி. இளைஞர் முன்னேற்றக் கழக திறப்பு விழா

31—10—54 மாலை 6½ மணிக்கு சென்னை, புதுப்பேட்டை, தோட்டத் தெருவிலுள்ள திடலில், தோழர் கே. ஆர். சம்மந்தம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், கண்ணதாசன், புரட்சிமணி ஆகியோர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

30—10—54 இரவு 8 மணிக்கு சென்னை 50-வது வட்ட தி. மு. கழக இல்லத்தில் தோழர் என். வி. சந்திரன் தலைமையில் 'கல்லக்குடி வெற்றி' என்னும் தலைப்பில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்,

* * *

30—10—54 மாலை 7 மணிக்கு சென்னை, தொண்டையார் பேட்டை தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் டி. என். இராவணன் தலைமையில், 'கவிஞனும் மக்களும்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

31—10—54 மாலை 6 மணிக்கு நாகை தி. மு. கழகக் கட்டிடத்தில் அழகிரி சொற்பயிற்சி மன்றத்தின் சார்பில், 'விடுதலை இயக்க வரலாறுகள்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பாண்டியன், ஜோசப், மாரிமுத்து, சுப்பையா, சுவடி, கண்ணன், சித்ரவேல், கல்யாணம் ஆகியோர் பயிற்சிலீடுபடுவர்.

குமாரபாளையம் உயர்நிலைப் பள்ளி கட்டிட திறப்பு விழா

31—10—54 காலை 10-30 மணிக்கு குமாரபாளையத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம், மைசூர் ராஜப் பிரமுகர் ஜயசாமராஜ உடையார் பகதூர் அவர்களால் திறப்பு விழா நடைபெறும். மாலை 4-30 மணிக்கு தோழியர் கே. பி. சுந்தராம்பாள் இன்னிசை வழங்குவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.